மே 13, 2015

## ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது

*இனிமையான குழந்தாய்: நீ இப்பொழுது தந்தை ஞானக்கடல், சந்தோஷக்கடல் என்பதை அறிவாய். அவர் நிச்சயமாக முன்னர் இந்த ஞானத்தைக் கொடுத்தார். அதன்பிறகு திரும்பிவிட்டார். இதனால்தான் அவர் நினைவு செய்யப்படுகின்றார்.*

*இனிமையான பாபா, நாள் பொழுதில் இந்த விழிப்புணர்வை நான் மீண்டும் உறுதி செய்து கொள்கின்றேன்: நான் ஒரு ஆத்மா. நான் தந்தை கூறுவதைக் கேட்கிறேன். ஆத்மாவாகிய நான், அவரது ஞானத்தைக் கிரகிக்கின்றேன். நான் ஓர் அழிவில்லாத ஆத்மா ஆவேன்.*

## சமார்த்தி அல்லது சக்தி

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

## மனோ-விருத்தி அல்லது மனோபாவம்

*பாபா ஆத்மாவிற்கு: ஆத்ம-உணர்வில் இருப்பதே முக்கியமான முயற்சி ஆகும். நீ சத்தோபிரதான் ஆகுவது பற்றி அக்கறை கொண்டிருக்க வேண்டும். உன் வாயிலிருந்து ஒருபொழுதும் கற்கள் வெளிப்பட அனுமதிக்காதே. நீ ஒரு தவறு செய்துவிட்டால், உடனடியாகத் தந்தையிடம் தெரிவிக்க வேண்டும்: பாபா, நான் இந்தத் தவற்றைச் செய்துவிட்டேன், என்னை மன்னித்துவிடுங்கள். உன்னுடைய தவறுகளை ஒருப்போதும் மறைக்காதே.*

*நான் மேற்கொள்ளும் முயற்சிகளில் கவனத்துடன் இருக்கப் பணிவான மனோபாவத்தைக் கொண்டிருப்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். ஓர் பணிவான மனோபாவமானது நான் தூய்மை ஆகுவதற்குக் கொண்டிருக்கும் பொறுப்பில் என்னை விழிப்புற இருக்கச் செய்கின்றது. நான் கவனக்குறைவை துறப்பேன். மேலும் எனக்கு நானே நன்மை பயக்கும் வழிமுறைகளைத் தொடர்ந்தும் உருவாக்குவேன்.*

## திருஷ்டி அல்லது தூய பார்வை

*பாபா ஆத்மாவிற்கு: நீ தந்தையின் நினைவில் இருக்கும்போது, நீ தவறான விஷயங்களைச் சொல்ல மாட்டாய். தீய பார்வையும் அங்கு இருக்க முடியாது. அனைத்தையும் பார்க்கும் போதும், நீ எதையும் பார்க்காதது போல் இருக்கும். ஞானம் என்ற உன்னுடைய மூன்றாவது கண் இப்பொழுது திறந்திருக்கின்றது.*
*'தீயதையும் பார்க்காதே' என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். அதற்கு மாறாக, தந்தை எவ்வாறு என்னை ஞானம் என்ற மூன்றாவது கண்கள் மூலம் காலத்தின் முன்றுஅம்சங்களையும் பார்க்க செய்கின்றார் என்பதை அனுபவம் செய்கின்றேன்.*

## ஒரு அலையை உருவாக்குதல்

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஒரு அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.

குறிப்பு 1: சாய்வு வார்த்தைகள் அந்தநாள் முரளியிலிருந்து தொகுக்கப்பட்டவை.
குறிப்பு 2: இந்த வண்ணத்தில் இருக்கும் வார்த்தைகள் ஒவ்வொரு நாளும் மாறாமல் இருக்கும்.